சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 74/2018

பெயர். திருமதி. சரிதா க /பெ. ரஜினிசெல்வம் நாள் 01.02.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1. நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** விபத்து சம்மந்தமான சட்டம் சார்ந்த மருத்துவக் குறிப்புரை **ம.தசா.ஆ.2**. என்னுடைய காயச்சான்றிதழ் **ம.த.சா.ஆ.3**. மருத்துவ செலவீன ரசீது **ம.த.சா.ஆ.4**. குற்ற இறுதி அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.5**. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஆய்வறிக்கையின் நகல் **ம.தசாஆ.6**. 1ம் எதிர்மனுதாரர் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கான உத்தரவு நகல் **ம.த.சா.ஆ.7**. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் **ம.த.சா. ஆ. 8 முதல் 10**. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.த.சா.ஆ.11 மற்றும் 12**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)